மின்னணு உற்பத்தி குறித்து பெருமையாகக் குறிப்பிடும் ஒன்றிய அரசு

# தமிழ்நாட்டின் உயர் மதிப்பு உற்பத்தி குறித்து தெளிவான உறுதி இல்லை!

## மக்களவையில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஆக. 8 -

மின்னணு உற்பத்தி வளர்ச்சி குறித்து பெருமை பேசும் ஒன்றிய அரசு; தமிழ்நாட்டின் உயர் மதிப்பு உற்பத்தி இலக்குகளுக்கு தெளிவான உறுதி இல்லை என மக்களவையில்ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றம் சாட்டினார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ், புதிய மொபைல் போன் உற்பத்தித் திட்டத்தின் கீழ் உள்நாட்டு மதிப்புக் கூட்டல், வடிவமைப்புத் திறன் மற்றும் மேம்பட்ட மின்னணு கூறுகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்று கேட்டார். மேலும், ஆராய்ச்சி, புதுமை மற்றும் மின்னணு கூறுகள் உற்பத்திக்காக வழங்கப்படும் ஊக்கத்தொகைகள் மற்றும் நிதி ஆதரவின் விவரங்கள், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஓசூர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் உற்பத்தி மையங்களின் திறன் உயர் மதிப்பு மின்னணு உற்பத்தி மற்றும் உலகளாவிய மதிப்புச் சங்கிலியில் இணைவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும், உள்நாட்டு மின்னணு உற்பத்தித் திறன் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை மேலும் வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள அல்லது மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் என்ன என்பதையும் விளக்கம் கோரினார்.

அதற்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் பதில் வருமாறு: -

(அ) முதல் (ஈ) வரை: மேக் இன் இந்தியா மற்றும் ஆத்மநிர்பர் பாரத் என்ற பிரதமரின் நோக்கத்தை முன்னிறுத்தி, இந்தியாவில் முழுமையான மின்னணு உற்பத்தி சூழலை உருவாக்க ஒன்றிய அரசு பல்வேறு கொள்கை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

முதலில் இறுதிப் பொருட்கள், பின்னர் துணைக் கூறுகள், அதன் பின் மின்னணு கூறுகள், இறுதியில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் என கட்டமைக்கப்பட்ட முறையில் இந்தியாவின் மின்னணு உற்பத்தித் துறையை வளர்க்கும் உத்தி பின்பற்றப்பட்டதாகவும், அதற்குத் தேவையான உள்கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக இந்தியா உலகளாவிய மின்னணு உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளதாகவும், கடந்த 12 ஆண்டுகளில் மின்னணு உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

2014-15 - 2025-26 ஆகிய ஆண்டில் விபரம் வளர்ச்சி

மின்னணு பொருட்கள் உற்பத்தி - சுமார் 1.9 லட்சம் கோடி - சுமார் 13.11 லட்சம் கோடி - 7 மடங்கு

மின்னணு பொருட்கள் ஏற்றுமதி - சுமார் 38 ஆயிரம் கோடி - சுமார் 34.24 லட்சம் கோடி - 11 மடங்கு

மொனபல் போன் உற்பத்தி - சுமார் 18 ஆயிரம் கோடி - சுமார் 6 27 லட்சம் கோடி - 33 மடங்கு

மொபைல் போன் ஏற்றுமதி - சுமார் 1,500 கோடி - சுமார் 22.59 லட்சம் கோடி - 165 மடங்கு

இந்த வளர்ச்சிக்காக ஒன்றிய அரசு கடந்த 12 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாகவும், அவற்றில் பெரிய அளவிலான PLI LLD, IT Hardware PLI 2.0, Electronics Component Manufacturing Scheme (ECMS), Semicon India Programme, EMC 2.0, SPECS, செமிகண்டக்டர் மற்றும் டிஸ்ப்ளே உற்பத்தி மேம்பாட்டு திட்டம், Make in India கொள்முதல் முன்னுரிமை மற்றும் 100% அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி ஆகியவை அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொபைல் போன் உற்பத்திதான் இந்தியாவின் மின்னணு உற்பத்தி வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்ததாகவும், 2025-26 ஆம் ஆண்டில் இந்தியா உலகின் இரண்டாவது பெரிய மொபைல் போன் உற்பத்தியாளராகவும், இறக்குமதி செய்யும் நாட்டிலிருந்து நிகர ஏற்றுமதி நாடாகவும் மாறியுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

15.07.2026 அன்று 62,500 கோடி நிதி ஒதுக்கீட்டில் மொபைல் போன் உற்பத்தித் திட்டம் (MPMS) ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் பெற்றுள்ளதாகவும், உள்நாட்டு மதிப்புக் கூட்டல், முக்கிய கூறுகளின் உள்நாட்டு கொள்முதல், இந்திய வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கு கூடுதல் ஊக்கத் தொகைகள் வழங்குவது இதன் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முக்கிய மின்னணு கூறுகள் மற்றும் துணைக் கூறுகளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் Electronics Component Manufacturing Scheme (ECMS) ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மின்னணு உற்பத்தி

மாவட்டம் - உற்பத்தி அலகுகள் எண்ணிக்கை விபரம் வருமாறு:

செங்கல்பட்டு - 4, சென்னை - 6, கோயம்புத்தூர் - 1, காஞ்சிபுரம் - 38, கிருஷ்ணகிரி - 8, தூத்துக்குடி - 2, திருநெல்வேலி - 1, திருவள்ளூர் - 6, வேலூர் - 1

இந்த அலகுகளில் மொபைல் போன்கள், IT Hardware வாகன மின்னணு சாதனங்கள், நுகர்வோர் மின்னணு சாதனங்கள். Printed Circuit Boards (PCB), Display Modules, Enclosures, Transducers, LED, Chargers Connectors ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

EMC 2.0 திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம்மற்றும்திருவள்ளூரில் இரண்டு Greenfield Electronics Manufacturing Clusters ஒப்புதல் பெற்றுள்ளன. இத்திட்டங்களின் மொத்த மதிப்பு 1,012.02 கோடி: 853.6 ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கிய இத்திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் நிதி உதவியாக 506 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு கே.இ.பிரகாஷ் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.



சேலத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் தலைமையில் அண்ணா பூங்கவில் உள்ள தலைவர் கலைஞரின் சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த தலைவர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

## அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் – திருவுருவச் சிலைக்கு கழகத்தினர் மரியாதை!

திருச்சி, ஆக. 8 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மௌன அஞ்சலி ஊர்வலம் மற்றும் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருச்சி அண்ணா ஸ்டேடியம் ரவுண்டானாவில் இருந்து தொடங்கிய மௌன அஞ்சலி ஊர்வலம், டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை அடைந்தது. அங்கு திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர்

மு. மதிவாணன், கழக செய்தித் தொடர்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கவிஞர் சல்மா,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே.என். சேகரன்,

பி.எம். சபியுல்லா, கழக இலக்கிய அணி புரவலர் எம். செந்தில், மாநகராட்சி துணை மேயர் டி. திவ்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

மேலும் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூராட்சி, வட்ட, வார்டு மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்




னோடிகள் மற்றும் ஏராள கள் கலந்து கொண்டு அவர்களுக்கு புகழஞ்சலி மான கழகத் தொண்டர் முத்தமிழறிஞர் கலைஞர் செலுத்தினர்.

ஒன்றுக்கும் உதவாத –

# மாற்றுத்திறனாளிகளையும் மோசம் செய்த வெற்று த.வெ.க. பட்ஜெட்!

## தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் அறிக்கை!



சென்னை, ஆக. 8 -

கழக மாற்றுத்திறனாளிகள் அணி செயலாளர் பேரா.தீபக்நாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முழுக்க முழுக்க மோசடியால் நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் வெகு மக்களுக்கு பல பொய்யான வாக்குறுதிகளை தந்தது ஏமாற்றியது போல் மாற்றுத்திறனாளிகளுக்கும் பளபளப்பாய் பல பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி சோபாவிற்று ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் விஜய் தாக்கல் செய்திருக்கும் பட்ஜெட்டில் அவர் தந்த வாக்குறுதிகள் குறித்த எந்த அறிவிப்பும் செய்யப்படாதது உண்மையில் மாற்றுத்திறனாளி சமூகத்திற்கு பெருத்த ஏமாற்றத்தை தந்திருக்கிறது.

**திராவிட மாடல் அரசில் மாற்றுத்திறனாளிகள்:**

கடந்த 2021-ல் திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் மாற்றுத்திறனாளிகள் மாதாந்திர உதவித் தொகையை 1500 ரூபாயாக உயர்த்தி தருவதாக சொல்லிய கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2021 ஆட்சி அமைந்த உடன் வாக்குறுதிபடி ஆயிரம் ரூபாய் உதவித்தொகை பெற்று வந்த மாற்றுத்திறனாளிகளுக்கு 1500 ரூபாயும் 1500 ரூபாய் பெற்று வந்த கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 2000 ஆக உதவித்தொகை உயர்த்தி வழங்கினார். அதேபோல் கடந்த 2026 சட்டமன்ற தேர்தல் வாக்குறுதியில் மாதாந்திர உதவித் தொகை 1500 இல் இருந்து 2500 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது ஒரு வேளை மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்திருந்தால் சொன்னபடி மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை இந்நேரம் உயர்த்தி வழங்கப்பட்டிருக்கும் என்பதற்கு 2021 வாக்குறுதி நிறைவேற்றமே சான்று.

**ரூபாய் 1472 கோடி ஒதுக்கிய திராவிட மாடல் அரசு:**

மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டிற்கு ஒட்டு மொத்த இந்தியாவிற்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி 1400 கோடி ரூபாயாக இருக்க திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டிற்கு அதிகப்படியான நிதி ஒதுக்கீடாய் ஒட்டுமொத்த இந்தியாவிற்கான நிதி ஒதுக்கீட்டை விட 72 கோடி கூடுதலாக ரூபாய் 1472 ஒதுக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகள் வாழ்வு வளம் பெற முன் எப்போதும் இல்லாதபடி பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன அதன் விளைவாக பள்ளி கல்லூரி பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கட்டண சலுகை, பொறியியல் மற்றும் மருத்துவ ம் பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டணத்தில் இருந்து விலக்கு, தொழிற்பயிற்சி, சுய தொழில் தொடங்க நிதி உதவி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வீடு ஒதுக்கீடு, சர்வ தேச தரத்திலான உதவி உபகரணங்கள் மேம்படுத்தப்பட்ட சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டர்கள் ஒரு லட்சம் ரூபாய்க்கும் அதிகமான விலை கொண்ட ஸ்டேரிங் பொருத்தப்பட்ட தானியங்கி சக்கர நாற்காலிகள், காப்பீட்டு திட்டங்கள், திருமண உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகள் குழந்தைகளின் படிப்புக்கான உதவித்தொகை என இன்னும் எண்ணிலடங்க நலத்திட்டங்களை மாநில முழுவதும் இருக்கும் மாற்றுத்திறனாளிகள் பல்வேறு அரசு உதவிகளைப் பெற்று பயனடைந்தனர்.

**மாற்றுத்திறனாளிகளை ஏமாற்றிய விஜய் அரசு:**

மாற்றுத் திறனாளிகள் வாழ்க்கையைப் பற்றி எவ்வித புரிதலும் இல்லாமல் ஆட்சிக்கு வந்தால் மாதாந்திர உதவித்தொகை 3000 உயர்த்தி வழங்கப்படும் என வாக்குறுதி அளித்த விஜய் அவர்களின் தவெக இன்று ஆட்சிக்கு வந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்ஜெட்டில் அது பற்றி எந்தவித அறிவிப்பும் இல்லாமல் கடந்து சென்றிருப்பது த.வெ.க. வின் ஏமாற்று வேலையை வெட்ட வெளிச்சப் படுத்தி காட்டுகிறது உதவித் தொகை உயர்த்தி வழங்கப்படும் என்று காத்திருந்த மாற்றுத்திறனாளிகள் உள்ளங்களில் இருளை ஏற்படுத்தி இருக்கிறது.

**பொய் பரப்பிய விஜய் அரசு:**

உண்மையில் எதுவுமே செய்யாமல் விஜய் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையை உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார் என்று பொய் சுனாமி மூலம் இந்த மாநிலத்தையே சுருட்டி வாரி இன்று இருளில் தள்ளிய ரூட் மாபியா மூலம் பொய் செய்தி கசிய விடப்பட்டு விஜய் அவர்களுக்கு போலி பிம்பம் உருவாக்கும் வேலையை சில கூலிக்கு மாரடிக்கும் அமைப்புகளை கொண்டு நடத்தப்பட்டது ஆனால் இன்று அத்தனையும் பொய் என்று இந்த பட்ஜெட் பல் இளித்து நிற்கிறது.

இந்த அரசு மாற்றுத்திறனாளி களின் வாழ்வியல் மற்றும் உரிமை சார்ந்த பார்வை இல்லாமல் கழிவிறக்க பார்வையோடு செயல்படுகிறது என்பதற்கு இது மேலும் உறுதியான சான்றாகும். எனவே இது போல் தங்கள் புத்திக்கு எட்டாத வேலைகளை செய்து மாற்றுத்திறனாளிகளை பாதிப்புக்கு உள்ளாக்குவதை விடுத்து அறிவந்தவர்களின் ஆலோசனையை பெற்று ஆக்கபூர்வமான திட்டங்களை தீட்ட வேண்டும்.

மேலும் வெகு மக்களை ஏமாற்றுவது போல் விளிம்பு நிலை மாற்றுத் திறனாளிகளையும் ஏமாற்ற நினைக்காமல் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தபடி மாற்றுத் திறனாளிகள் மாதாந்திர உதவித் தொகையை 3000 ஆக உயர்த்தி உடனே அறிவித்திடவும் இன்று அறிவிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கை இல்லம் திட்டத்தை உடனே கைவிட வேண்டும் என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாற்றுத் திறனாளிகள் அணி வலியுறுத்துகிறது.

**எதுவுமே செய்யாத த.வெ.க. அரசு:**


மொத்தத்தில் நேற்று முன்தினம் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட் என்பது மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் துளி அளவு கூட மாற்றத்தை நலனை கருத்தில் கொள்ளாமல் அறிவிக்கப்பட்டு இருக்கும் வெற்று பட்ஜெட் என்பதையும் மாற்றுத்திறனாளிகளுக்கென எதையுமே செய்யாமல் பெரிதாய் எதையோ செய்து விட்டது போல பொய் பிம்பத்தை காட்ட முற்பட்டிருக்கும் வெற்று வேட்டு என்பதை திராவிட முன்னேற்ற கழக மாற்றுத்திறனாளர் அணி இந்த அரசின் போலித்தனத்தை சமூகத்திற்கு தோலுரித்துக் காட்டும் என்பதையும் இந்த ஒன்றுக்கும் உதவ பட்ஜெட்டிற்கு தனது கடுமையான கண்டனத்தை இங்கே பதிவு செய்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு.பெ. நீலகண்டன்

**ஆகஸ்ட் 8 (1999)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, இளமைக் காலம் முதல் கழகத்தில் உறுப்பினராகி, ஆழ்வார்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**நான்கு முறை வட்டக் கழகச் செயலாளராகவும், வட்ட அவைத்தலைவர், மாவட்ட பிரதிநிதி ஆகிய பொறுப்பு வகித்தவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இலங்கை தமிழர் ஆதரவு என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**